## விருதுநகர் தெற்கு மாவட்டம் – சாத்தூர் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் சந்திப்பு:

# கழக அரசு 7-வது முறையாக ஆட்சியில் அமர அடுத்த 6 மாதம் சிறப்பாகச் செயல்படுங்கள்!

## சாத்தூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை

விருதுநகர்,செப்.24-

**விருதுநகர் மாவட்டம், சாத்தூரில், விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகம், சாத்தூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - வட்ட - கிளை நிர்வாகிகள், பி.எல்.ஏ.-2 நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, ``நம் கழக அரசு ஏழாவது முறையாக ஆட்சியில் அமர வேண்டும் என்றால், நாம் அடுத்த ஆறு மாதம் களத்தில் இறங்கி சிறப்பாகச் செயல்பட வேண்டும். அதை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

சாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இயக்கத்தின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், அணிகளின் மாநில நிர்வாகிகள், உங்கள் அத்தனை பேரையும் ஒரே அரங்கத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மிகுந்த ஆர்வத்துடன், சிரித்த முகத்தோடும், எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் என்னை வரவேற்று இருக்கிறீர்கள்.

### எழுச்சிமிக்க ஏற்பாடுகள்

உங்களுடன் பேசிவிட்டு, உங்கள் அத்தனை பேருடனும் தனித்தனியாக ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். எனவே அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும், முதலில் அனுமதி கொடுக்க வேண்டும். மிக குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பான ஏற்பாடு செய்துள்ளீர்கள். இரண்டு நாட்களுக்கு முன்புதான் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அண்ணனிடமும், அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களிடமும், உங்களின் மாவட்டத்துக்கு நான் வருவதாக இருக்கின்றேன், ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்டேன். இவ்வளவு சிறப்பாக, எழுச்சியாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இருவருக்கும், மாவட்ட நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களில் பலபேரை ஒரு வாரத்துக்கு முன்பு, கரூர் முப்பெரும் விழாவில் நேரில் சந்தித்திருந்தேன். நம் தலைவர் அவர்கள் கொட்டுகின்ற மழையிலும், அவ்வளவு எழுச்சியாக பேசும்போது, அதற்கு தகுந்த மகிழ்ச்சியையும், வரவேற்பையும், எழுச்சியையும் நம் கழக உடன்பிறப்புகள் நீங்கள் அத்தனை பேரும் வெளிப்படுத்தி இருந்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### புத்துணர்ச்சி – உற்சாகம்

உங்களையெல்லாம் சந்தித்து, உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று தலைவர் அவர்கள் என்னை இங்கே அனுப்பி வைத்தார். ஆனால், உங்களை பார்க்கும்போது அந்த புத்துணர்ச்சி, உற்சாகம், உங்களைக் கண்டதும் எனக்கு தொற்றிக்கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் நம் கழகம் தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகள் முடிவுற்று, 76-வது பிறந்த நாளை நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். ஆனாலும், 76-ஐ வயதைத் தொட்ட நம் கழகம்தான் இன்னும் இளமையோடு, உணர்ச்சியோடு, வலிமையோடு இருக்கிறது. அதற்கு மிக மிக முக்கியமான காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய கலைஞரின் உடன்பிறப்புகளான நீங்கள்தான்.

இந்த 75 வருடங்களில் எத்தனையோ துரோகங்களை, சவால்களை, போராட்டங்களை, நம்பிக்கைத் துரோகங்களை, பெரிய பெரிய எதிரிகளை எல்லாம் கூட சந்தித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவின் முடிசூடா மன்னன் என்று கூறப்பட்ட ஜவஹர்லால் நேருவுடன் சண்டை போட்டு இருக்கிறோம். உடம்பெல்லாம் மூளை என்று புகழப்பட்ட ராஜாஜியுடன் சண்டை செய்திருக்கிறோம். தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தியைத் திணிக்க முயன்ற பெரியவர் பக்தவத்சலத்துடன் சண்டை போட்டு இருக்கிறோம்.

### துணிச்சல் மிக்க தலைவர்

இப்படி நாம் சண்டை போடாத ஆளே கிடையாது. `நாம் பத்து பேரை அடித்து டான் ஆகவில்லை, நாம் அடித்த ஒவ்வொருத்தருமே டான்' என்ற சினிமா வசனம் போல, தி.மு.க-வில் இருக்கின்ற உடன்பிறப்புகள், நீங்கள் புகழ் பெற்றவர்கள். இப்படிப்பட்ட வரலாறு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, இன்றைக்கு தமிழ்நாட்டு அரசியல் களத்தில் தகுதியான எதிரிகளே இல்லை. நம் தலைவருக்கு நிகரான இன்னொரு தலைவர் இன்றைக்கு அரசியல் களத்திலேயே இல்லை. இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு இந்தியாவிலேயே ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கேள்வி கேட்கிற, நம் மாநில உரிமைகளுக்கு எப்போதெல்லாம் பிரச்சினை வருகிறதோ, அதையெல்லாம் தட்டிக்கேட்கிற ஒரே தலைவர், துணிச்சலோடு கேட்கக்கூடிய தலைவர், அனைத்து முதலமைச்சர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக, ரோல் மாடலாக இருக்கக்கூடிய தலைவர் என்றால், அது நம் தலைவர்தான்.

அப்படிப்பட்ட தலைவர் உருவாகியதற்கு காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய தொண்டர்களாகிய நீங்கள்தான். இன்றைக்கு நம் இயக்கத்தை யாராலும் அசைக்க இயலவில்லை, தொட்டுக்கூட பார்க்க முடியாது என்று நாம் தைரியமாகச் சொல்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய நம் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் நீங்கள்தான். ஏனென்றால், நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. நீங்கள் இல்லாமல் இன்றைக்கு நம் தலைவர் கிடையாது. நீங்கள் இல்லாமல் திராவிட மாடல் அரசும் கிடையாது.

### திராவிட மாடல் அரசு

இன்றைக்கு ஆட்சியாக இருந்தாலும் சரி, கட்சியாக இருந்தாலும் சரி, நம் தலைவர் அவர்கள் ஒட்டுமொத்த நாட்டுக்கே ஒரு வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கிறார். நம் திராவிட மாடல் அரசு சார்பாக, ஒவ்வொரு நாளும் ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். தேர்தல் வாக்குறுதியில் சொன்னதையும் செய்திருக்கிறோம், சொல்லாத பல திட்டங்களையும் செய்திருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும், இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் அவர் முதல் நாள் போட்ட ஐந்து கையெழுத்துகளில் முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயண திட்டம். இந்த திட்டத்தின் மூலம், இந்த நான்கரை ஆண்டுகளில் ஒவ்வொரு மகளிரும், மாதந்தோறும் 1,000 ரூபாய் சேமித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் கிட்டத்தட்ட 780 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. உதாரணத்துக்கு இந்த சாத்தூர் தொகுதியில் மட்டும் 7 லட்சத்து 60 ஆயிரம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம், நீங்கள் இங்கு இருக்கக்கூடிய பகுதி மக்களிடம் நினைவூட்டிக்கொண்டே வேண்டும்.

### புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று தலைவர் ஒரு திட்டத்தை கொண்டு வந்தார். மாணவர்கள் எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும் அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக, மாணவியாக இருந்தால், புதுமைப் பெண் திட்டம், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய், அந்த மாணவர்களின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இந்த 2 திட்டங்களால் சுமார் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள். இந்த சாத்தூர் தொகுதியில் மட்டும் 2,500 பேர் மாதந்தோறும் தலா ஆயிரம் ரூபாய் பெற்று வருகின்றனர். உங்கள் வீட்டில் உள்ள மகனோ, மகளோ, பேரனோ, பேத்தியோ இந்தத் திட்டத்தில் நிச்சயம் பயனாளியாக இருப்பார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து வீடுகளிலும், ஒருவராவது திராவிட மாடல் அரசின் ஏதாவதொரு திட்டத்தின் பயனாளியாக இருப்பார். நம் வீட்டுப் பிள்ளைகள் இந்தப் பயன்களால், நிச்சயம் நம் அரசுக்கும் கழகத்துக்கும் துணையாக, ஆதரவாக இருப்பார்கள். ஆனால், இந்த திட்டங்களில் பயன்பெறுகிற உங்களின் நண்பர்களிடம், உங்களின் உற்றார் உறவினர்களிடம் நீங்கள் இந்தத் திட்டத்தை எல்லாம் கொண்டு சேர்க்க வேண்டும்.

### அழைத்துப் பேசினார்

தேர்தல் அறிக்கையில் கூட நாம் சொல்லாத இன்னொரு முக்கியமான திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். முதலமைச்சர் அவர்கள் ஒரு நாள் ஆய்வுக்காக ஒரு அரசு பள்ளிக்குச் சென்றார். அங்கு ஒரு குழந்தை மிகவும் சோர்வாக அமர்ந்திருந்தது. அந்தக் குழந்தையை அழைத்துப் பேசினார். ``என்னப்பா ஏன் சோர்வாக இருக்கிறாய்?'' என்று கேட்டார். அந்த குழந்தை, "ஐயா காலையிலிருந்து சாப்பிடவில்லை, என் அம்மா காலையில் சாப்பாடு இல்லாமல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுகிறார். அதனால் மயக்கமாக இருக்கிறது" என்று கூறியது. அன்றைக்கு முடிவெடுத்த நமது தலைவர், "இனிமேல் காலையில் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு, அதன்பிறகு தரமான கல்வி வழங்கப்படும்" என்று அறிவித்தார். 20 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். நம் சாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 10,400 குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தை, இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 2023 செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் தொடங்கி, 24 மாதங்களாக, 24 ஆயிரம் ரூபாயை, 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

### மாநில உரிமை

இந்தத் தொடர் நடவடிக்கையால்தான் இன்றைக்கு நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே 11.19 சதவிகித வளர்ச்சியுடன் நம்பர் 1 இடத்தில் இருக்கிறது. இதனால்தான் ஒன்றிய அரசு எவ்வளவோ பிரச்சினைகள், இடையூறுகள், சூழ்ச்சிகளை எல்லாம் செய்து பார்க்கிறார்கள். எவ்வளவோ பிரச்சினைகளைக் கொடுத்தாலும் கழக அரசு சிறப்பாகத்தான் செயல்படுகிறது. தமிழ்நாடு ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டே போகிறார்களே என்று சங்கிகளுக்கும், அடிமைகளுக்கும் தினமும் ஏதாவதொரு எரிச்சலைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதனால்தான், புதுப்புது பிரச்சினைகளை நமக்கு எழுப்புகிறார்கள்.

நிதி உரிமை, மொழி உரிமை, மாநில உரிமையைப் பறிக்கப் பார்க்கிறார்கள். புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி எப்படியாவது இந்தியையும், சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டுக்குள் திணிக்கப் பார்க்கிறார்கள். தொகுதி மறுவரையறையைக் கொண்டு வந்து 39 நாடாளுமன்ற தொகுதிகளை குறைத்து, 32 தொகுதியாக மாற்றப் பார்க்கிறார்கள்.

மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் பறிக்கப் பார்க்கிறார்கள். வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம் என்று ஏகப்பட்ட பிரச்சினைகளை, குறிப்பாக தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுத்து வருகிறது. ஆனால், இவை எல்லாவற்றையும் நம் தலைவர் அவர்கள் இடது கையால் சமாளித்துச் சென்றுக் கொண்டு இருக்கிறார். அதுதான் அவர்களுக்கு இன்னும் கூடுதல் வயிற்றெரிச்சல்.

`மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் நமக்குப் பயப்படுகிறார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் நாம் சொல்வதைக் கேட்கின்றன. மற்ற மாநிலங்களில் எல்லாம் நம்மால் வெற்றிபெற முடிகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் நம்மால் எட்டிக்கூட பார்க்க முடியவில்லை' என்ற வயிற்றெரிச்சல்தான் சங்கிகளுக்கும், அவர்களின் அடிமைகளுக்கும் தோன்றுகிறது. எப்படியாவது கழகத்தை வீழ்த்த வேண்டும். தமிழ்நாட்டைக் கைப்பற்ற வேண்டும், தமிழர் உரிமைகளைச் சிதைக்க வேண்டும் என்று நம் இன எதிரிகள் புதிது புதிதாக எதையாவது முயற்சிக்கிறார்கள்.

### கடைசித் தொண்டன்

எங்கள் கருப்பு-சிவப்பு வேட்டி கட்டிய கடைசித் தொண்டன் இருக்கும்வரை, உங்களால் தமிழ்நாட்டுக்குள் கால் எடுத்துக்கூட வைக்க முடியாது. உங்களால் மட்டுமல்ல, எந்தக் கொம்பனாலும் தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாது என்பதைத்தான் எதிரிகளுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் நம்மிடம் வலிமையான கொள்கைகள் இருக்கிறது. அரசின் சாதனைகள் இருக்கிறது. தமிழ்நாடு மக்கள் அனைத்திலும் வெற்றிபெற வேண்டும் என்று 76 வருடமாக நாம் போராடிக்கொண்டு இருக்கிறோம். இந்த விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்கு இந்த நான்கு ஆண்டுகளில் நம் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சாத்தூரில் புதிய பேருந்து நிலையம், சுற்றுலா மாளிகை, புதிக மின் பகிர்மான கோட்டம், சாத்தூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வெம்பக்கோட்டை அணையை மேம்படுத்தி, அங்கு ஒரு புதிய பூங்காவை உருவாக்கியுள்ளோம். வெம்பக்கோட்டையில் மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகளைத் துவக்கியுள்ளோம். சம்பா மிளகாய் வத்தலுக்குப் புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.



இந்த மாவட்டத்துக்கு நம் அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றி மக்களிடம் பேசுங்கள். மக்கள் ஏன் தி.மு.க.-விற்கு வாக்களிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை அடுத்த ஆறு மாதங்களுக்கு நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

### அசைக்க முடியாத சக்தி

உங்களுக்குள் தேர்தல் பணிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்கள் ஒவ்வொருவரின் கட்டுப்பாட்டில் 50 வாக்காளர்களை வைத்திருந்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. ஒரு அசைக்க முடியாத சக்தியாக நீங்கள் ஒவ்வொருவரும் இருப்பீர்கள். நீங்கள் மக்களோடு மக்களாகப் பழகுங்கள். அவர்களின் கோரிக்கைகளை காது கொடுத்து கேளுங்கள். அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டாலே அவர்களுக்கு பாதி நிம்மதி வந்துவிடும். உங்களால் செய்ய முடிந்தால், அதைச் செய்து கொடுங்கள். உங்களால் முடியவில்லை என்றால் உங்களின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உங்களின் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் இந்தப் பிரச்சினையை கொண்டுச் செல்லுங்கள். நிச்சயம் அவர்களால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். மக்கள் இன்றைக்கு நமக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

`ஓரணியில் தமிழ்நாடு' என்று நம் தலைவர் அவர்கள் ஒரு முன்னெடுப்பை ஆரம்பித்தார். 45 நாட்களில் கிட்டத்தட்ட 2 கோடி பேரை நம் இயக்கத்தில் உறுப்பினராக நாம் சேர்த்திருக்கிறோம். அதற்கு இந்த நேரத்தில் களத்தில் இறங்கி உழைத்த உங்கள் அத்தனை பேருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். 2 கோடி குடும்பங்களை நம் கழகத்தில் இணைத்துள்ளோம். பூத் கமிட்டி நிர்வாகிகள் வந்திருக்கிறீர்கள். நமக்கான ஆதரவாளர்களை, கழகத்துக்கான வாக்குகளாக நீங்கள் மாற்ற வேண்டும். அதை தலைவரிடம் வெற்றியாக நாம் கொண்டுச் சேர்க்க வேண்டும்.

பா.ஜ.க வெற்றி பெறுவதற்காக, குறிப்பாக நம்மைத் தோற்கடிப்பதற்காக எந்தவிதமான தில்லுமுல்லு வேலையிலும் இறங்குவார்கள். அதனால் அடுத்த 6 மாதம் நமக்கு ஓய்வே இருக்கக்கூடாது. இன்றைக்கு எதிர்க்கட்சி எந்த நிலைமையில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அ.தி.மு.க-வும், பா.ஜ.க-வும் ஒன்று சேர்ந்து வருகிறார்கள்.

தி.மு.க-வில் 25 அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, வழக்கறிஞர் அணி என்று 25 அணிகள் உள்ளன. ஆனால், அதைவிட அதிகமாக அ.தி.மு.க-வில் அணிகள் இருக்கின்றன. ஓ.பி.எஸ். அணி, டி.டி.வி அணி, சசிகலா அணி, தீபா அணி, தீபா டிரைவர் அணி, செங்கோட்டையன் அணி என்று பல அணிகள் உள்ளன. இந்த சாத்தூரில் கூட இராஜேந்திர பாலாஜி அணி, இராஜவர்மன் அணி என்று இரண்டு அணிகள் உள்ளன.

சமீபத்தில்கூட தி.மு.க-காரர்களுக்கும், அ.தி.மு.க-காரர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நகைச்சுவையாகச் சொன்னேன். வெவ்வேறு அல்லது ஒரே மாவட்டத்தில் இருக்கின்ற வெவ்வேறு பகுதியைச் சேர்ந்த தி.மு.க உடன்பிறப்புகள் நீண்ட நாள் கழித்து ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள் என்றால், "என்னப்பா நன்றாக இருக்கிறீர்களா? வீட்டில் அனைவரும் நன்றாக இருக்கிறார்களா? தலைவரின் அறிக்கையைப் பார்த்தீர்களா? பொதுக்கூட்டத்திற்கு சென்றாயா?" என்று கேட்டுப் பேசிக் கொள்வார்கள். ஆனால், இதே அ.தி.மு.க- காரர்களை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், இரண்டு அ.தி.மு.க காரர்கள் நீண்ட நாள் கழித்து சந்தித்தார்கள் என்றால், இரண்டு பேரும் பேசிக்கொள்ளவே மாட்டார்கள். இரண்டு பேரும் திருதிருவென முழிப்பார்கள். 'இவன் எந்த அணியாக இருப்பான். இவனிடம் நாம் பேசலாமா வேண்டாமா! இவன் சென்ற வாரம் வரை வேறு அணியில் இருந்தான், இன்று புதிதாக இரண்டு அணிகள் உருவாகியுள்ளன. இவன் எப்போது என் காலை வாரிவிடுவான்' என்றுதான் யோசிப்பார்கள்.

அந்த நிலையில்தான் இன்றைக்கு அ.தி.மு.க இருக்கிறது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு அணி உருவாகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஜெயலட்சுமி என்று ஒரு பெண் வந்துள்ளார். அந்தப் பெண் அமித் ஷாவைச் சென்று பார்த்துவிட்டு, வந்து, ``ஜெயலலிதாதான் என் உண்மையான அம்மா. நான்தான் உண்மையான வாரிசு. இனிமேல் அ.தி.மு.க. என் கன்ட்ரோல்'' என்கிறார்.

இதையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்களிடம் பத்திரிகையாளர்கள் கேட்டால், "இவற்றையெல்லாம் தலைமை முடிவு செய்யும். என் கட்டுப்பாட்டில் இல்லை" என்று சொல்கிறார். சமீபத்தில், செங்கோட்டையன் அவர்கள், `ஹரித்துவார் செல்கிறேன்' என்று சொல்லிவிட்டு அமித் ஷாவை பார்த்துவிட்டு வந்தார். எடப்பாடி பழனிசாமி அவர்கள் டெல்லி செல்கிறேன் என்று சொல்லிவிட்டு, நான்கு கார்கள் மாறி, கள்ளத்தனமாக வெளியில் வரும்போது மாட்டிக்கொண்டார். அவருக்கு கார் மாறுவது ஒன்றும் புதிது கிடையாது. ஆனால், தான் அமித் ஷாவை சந்தித்துவிட்டு வருவது தெரியக்கூடாது என்பதற்காக, காருக்குள் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொண்டு வந்தார்.

உள்துறை அமைச்சரைத்தானே பார்க்க சென்றீர்கள்? வேறு யாரையாவது பார்க்கச் சென்றீர்களா? அமித் ஷாவைப் பார்ப்பது அவ்வளவு கேவலமா? வெளியில் வந்த உடனே பத்திரிகையாளர்கள் பிடித்து விட்டார்கள். அடுத்த நாள் பத்திரிகையாளர் சந்திப்பில் இதுகுறித்து கேட்டால், `முகத்தைத் துடைப்பது அவ்வளவு பெரிய குற்றமா' என்று கேட்கிறார். நீங்கள் முகத்தைத் துடைக்கிற அளவுக்கு அப்படி என்ன டீலிங் நடந்தது?

15 கோடி ரூபாய் மதிப்புள்ள காரில்தான் எடப்பாடி பழனிசாமி சென்றார். விமானம் போல இருக்கும். அந்த காரிலேயே அவருக்கு வியர்க்கிறது என்றால், அப்போது உள்ளே என்ன பேசி இருப்பார்கள்? 3 மாதங்களுக்கு முன்பே தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார் எடப்பாடி பழனிசாமி. பிரச்சாரத்தைத் தொடங்கும்போது, பேருந்தைச் சுற்றி நிறைய கூட்டம் இருந்தது. இப்போது பாதி பிரச்சாரத்தை முடித்து விட்டார். ஒவ்வொரு நாளும் கூட்டம் குறைந்துகொண்டே போகிறது. பிரச்சாரத்தை முடிக்கும்போது எனக்கு தெரிந்து அவரும், டிரைவர் மட்டும்தான் தனியாக வருவார்கள்.

### இதுதான் மனிதத்தன்மை

இப்போது எங்கு சென்றாலும் ஆம்புலன்ஸை பார்த்தால் அவருக்கு கோபம் வருகிறது. ஆம்புலன்ஸ் பார்த்தால் மட்டுமல்ல, ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டாலே அவர் கோபப்படுகிறார். ஒரு ஆம்புலன்ஸ் வருகிறது என்றால் முதலில் அதற்கு வழிவிடுங்கள் என்றுதான் நம் தலைவர்கள் சொல்வார்கள், பொதுமக்களும் சொல்வார்கள். இதுதான் மனிதத்தன்மை. ஆனால் எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரக் கூட்டம் வழியே வந்த ஆம்புலன்ஸை நிறுத்தி, "உள்ளே இருப்பது யார் என்று பாருங்க. அந்த டிரைவர் நம்பரை வாங்குங்க" என்று மிரட்டினார் எடப்பாடி பழனிசாமி.

இதை நான் எடுத்துச் சொன்னதற்காக, என் மேல் கோபித்துக்கொண்டார். நான் அவரை மிரட்டி விட்டேன், விரைவில், அவரை ஆம்புலன்சில் ஏற்றப் போகிறேன் என்று நான் சொன்னதாக அவர் கூறினார். நான் அப்படி சொல்லவே இல்லை. "எடப்பாடி பழனிசாமி அவர்களே, பொதுமக்களுக்கு இடையூறு செய்கிறீர்கள். பொதுமக்கள் பயன்படுத்துகின்ற ஆம்புலன்ஸ் வண்டியை நிறுத்துகிறீர்கள். அதன் ஓட்டுநரை தாக்குகிறீர்கள். விரைவில் உங்களின் இயக்கம் அ.தி.மு.க.வையே ஆம்புலன்சில் ஏற்ற வேண்டிய நிலைமையை பா.ஜ.க ஏற்படுத்த போகிறது" என்றுதான் நான் சொன்னேன்.

``அப்போது உங்களைக் காப்பாற்றவும் எங்களின் முதலமைச்சர்தான் வருவார்'' என்றும் நான் கூறினேன். ஆனால், `உதயநிதிக்கு என் மேல் பயங்கரமான வன்மம், பொறாமையில் பேசுகிறார்' என்று எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பேசினார். "தவறான எண்ணத்தில் நான் சொல்லவில்லை. இன்னும் நீங்கள் நூறு ஆண்டுகள் நல்ல மனவளத்தோடு, உடல் வலிமையோடு வாழ வேண்டும். நீங்கள்தான் அ.தி.மு.க-வுக்கு நிரந்தர பொதுச்செயலாளராக இருக்க வேண்டும். உங்களை தவிர வேறு ஆளே கிடையாது. உங்களைவிட தகுதியான ஆள் அங்கு யாருமே கிடையாது. அப்படி இருந்தீர்கள் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது. எங்களுக்கும் வேலை சுலபமாக இருக்கும்" என்றும் நான் கூறினேன்.

இப்படிப்பட்ட நிலைமையில் இன்றைக்கு எதிர்க்கட்சிகள் உள்ளன. ஆனால், நம்முடைய தலைவர் அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்து தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறார். எனவே, நம் தலைவர், நம் கழக அரசு ஏழாவது முறையாக ஆட்சியில் அமர வேண்டும் என்றால், நாம் அடுத்த ஆறு மாதம் களத்தில் இறங்கி சிறப்பாகச் செயல்பட வேண்டும். அதை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கபாண்டியன், ஆதிதிராவிடர் நலக்குழுவின் மாநில இணைச் செயலாளர் வி.பி.ராஜன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் ராஜா அருண்மொழி, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா, சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் பாஸ்கரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கடற்கரை ராஜ், முருகேசன், ஜெயபாண்டியன், கிருஷ்ணகுமார், சரவண முருகன், ஜான்ராஜ், மல்லி ஆறுமுகம், நகரச் செயலாளர் குருசாமி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதல்வர் பதில்!

### ஔவல்சாமி, சிவல்பட்டி, வெம்பக்கோட்டை:

**எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு தி.மு.கழக வேட்பாளருக்கே வழங்கப்படுமா?**

**துணை முதல்வர்:** உங்கள் கோரிக்கையை, தலைவரிடம் நிச்சயம் கொண்டுசெல்கிறேன். ஆனால், ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய கூட்டணி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி. நம் தலைவர் 2018-இல் இந்தக் கூட்டணியை உருவாக்கினார். அதன் பிறகு, 2019-இல் இருந்து 2024 வரை இந்தக் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

தான் நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற ஒரே தலைவர் என்ற பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கு உள்ளது. அதேபோல் கழகத் தலைவராக நம் தலைவர் பொறுப்பேற்ற பின்பு, சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். நம் தலைவருக்கு மட்டும்தான் இந்தப் பெருமை உள்ளது. இந்த வெற்றிகளுக்கு முக்கியமான காரணம், தலைவர் அமைத்து இருக்கக்கூடிய அந்த வலுவான கூட்டணிதான்.

நிச்சயமாக, உங்களின் கோரிக்கையை தலைவரிடம் சொல்கிறேன். ஆனால் 234 தொகுதிகளுக்கும் நல்ல வேட்பாளர்களைத்தான் தலைவர் அறிவித்து, உங்களிடத்தில் ஒப்படைப்பார். வேட்பாளர் யாராக இருந்தாலும் சரி, 234 தொகுதிகளிலும் கலைஞர்தான் வேட்பாளர் என்ற எண்ணத்துடன் நீங்கள் பணியாற்றி வெற்றியைத் தேடித்தர வேண்டும்.

### கணேசன், சாத்தூர்:

**சட்டமன்றத் தேர்தலையொட்டி, மக்களிடம் நெருங்கிப் பிரச்சாரம் செய்யும் வகையில் தெருமுனைக் கூட்டங்கள் அதிக அளவில் நடத்தப்படுமா?**

**துணை முதல்வர்:** நிச்சயம் இது நல்ல கோரிக்கைதான். இளைஞர் அணி சார்பாக, இன்றைக்கு புதிய நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் தெருமுனைப் பிரச்சாரக்கூட்டங்கள் நடத்தி இருக்கிறோம். கிட்டத்தட்ட 1,500 கூட்டங்கள் நடத்தி இருக்கிறோம். இப்போது தலைவர் 45 நாட்களுக்கு முன்பு `ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பை நடத்தினார். அதைப் பயன்படுத்தி, நம் உடன்பிறப்புகள் எல்லோரும் இன்றைக்கு ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி, நேரடியாக மக்களைச் சந்தித்திருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் முப்பெரும் விழா விளக்கக் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்றும் தலைவர் அறிவித்திருக்கிறார். அதேபோல் இந்தத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டமும் மிக மிக அவசியம்.

### முருகன், சாத்தூர் மேற்கு ஒன்றியம்:

**மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒன்றிய வாரியாக செயல்வீரர் கூட்டம் நடத்தப்படுமா?**

**துணை முதல்வர்:** தலைவர் அவர்கள் உங்கள் அத்தனை பேரையும் ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கக்கூடிய முக்கியமானவர்களையும் `உடன்பிறப்பே வா' என்று ஒரு முன்னெடுப்பில் அறிவாலயத்துக்கு அழைத்து, உங்களுடன் நேரடியாகப் பேசி, உங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினைகள், கோரிக்கைகள் எல்லாவற்றையும் தலைவர் கேட்டறிந்து கொண்டிருக்கிறார். அதேபோல, `தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய அத்தனை நிர்வாகிகளையும் சந்தித்துவிட்டு வா' என்று தலைவர் எனக்கு கட்டளையிட்டு இருக்கிறார். அதனால்தான், இன்றைக்கு உங்களைச் சந்திப்பதற்கு சாத்தூருக்கு வந்திருக்கிறேன். விரைவில் தலைவர் அவர்களும் தன் பிரச்சாரத்தை ஆரம்பிப்பார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

### ராமகிருஷ்ணன், கடையம்பட்டி கிளை, சாத்தூர் ஒன்றியம்:

**அனைவருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும்...**

**துணை முதல்வர்:** நம் திராவிட மாடல் அரசு அமைந்து, தலைவர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், `நம் அரசின் இரு கண்கள், கல்வியும், சுகாதாரமும்' என்று சொன்னார். சொன்ன நிமிடத்திலிருந்து, இன்றுவரை அதைச் செய்து வருகிறார்.

நாம் ஆட்சி பொறுப்பேற்கும்போது கோவிட் தொற்று இரண்டாவது அலை காலகட்டம். ஒருவாரத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஒரு கூட்டத்தில் பேசும்போது, `அ.தி.மு.க ஆட்சியில் கோவிட் தொற்று காலத்தில் மக்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தார்கள்' என்று பேசியிருக்கிறார். ஆனால், அப்போது, மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடையாது, செலவழிக்க பணம் கிடையாது.

பிரதமர் மோடி ஒருநாள், அனைவரும் வீட்டில் விளக்கு ஏற்றுங்கள், தெருவில் நின்று கைத்தட்டுங்கள். அப்படிச் செய்தீர்கள் என்றால், கொரோனா பயந்து ஓடிவிடும்' என்று கூறினார். அதையும் இந்த அடிமைக்கூட்டம் செய்தது. ஆனால், மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார் என்கிறார் எடப்பாடி பழனிசாமி.

நம்முடைய தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வைக் கொண்டு வந்தார். கோவிட் வார்டுக்குள் பாதுகாப்பு உடையை அணிந்துகொண்டு சென்ற ஒரே முதலமைச்சர் தலைவர் அவர்கள்தான். சுகாதாரத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்.

அதன்பிறகு, குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர பயப்படுகிறார்கள் என்றதும், இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் வீடுகள் இருக்கின்ற பகுதிக்கே ஆசிரியர்களை அனுப்பி, கல்வியைக் கற்றுக்கொடுத்தோம். அதனால், கற்றல் திறன் மேம்பட்டு, இடைநிற்றலும் சரிசெய்யப்பட்டது. புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் என கல்விக்காக என்னற்ற திட்டங்களை இந்த நான்கரை ஆண்டுகளில் தந்திருக்கிறோம்.

நான் முதல்வன் என்ற திட்டத்தைச் செயல்படுத்தினார் நம் தலைவர் அவர்கள். 10-வது படிக்கும்போது மாணவருக்கு எந்தத் துறையில் ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அவரை அந்தக் கல்லூரியில் சேர்க்க வேண்டும். கல்லூரியில் படிக்கும்போது, அடுத்து என்ன வேலை வேண்டும். அதற்கான வேலைவாய்ப்பை உருவாக்கி தருவதுதான், நான் முதல்வன் திட்டம். இப்படிப் பல்வேறு திட்டங்களை, நம் அரசின் சார்பாக செயல்படுத்தி வருகிறோம்.